**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No.77 /2025**
**U/s. 296(b),118(1),351(3) BNS**
**PROSECUTION WITNESS NO. 2 (LW. 3)**

| | | |
|---|---|---|
| **Name** : சுவாமிநாதன். | | |
| **Father's/Husband Name :** | | **Occupation :** |
| **Address** : | | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 77/2025 13.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.45 AN**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் தெற்குவீதியில் குடியிருந்து டீக்கடை நடத்திவருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 13.08.2024 ம் தேதி மாலை சுமார் 6.30-7.00 மணியளவில் ஆஜர் எதிரி எனது டீக்கடையில் தேநீர் அருந்தி கொண்டிருந்தார். எனது கடையின் மேலே Consultancy என்ற பெயரில் நடத்தி வரும் சத்தியமூர்த்தி ஓரமாக நில்லுங்கள் என்று புகார்தாரர் சுந்தரை பார்த்து சொன்னார். அப்போது சுந்தர் புண்டைமகனே என்று அருவருத்தகக்க வார்த்தையால் திட்டி, நீ யாருடா என்ன கேட்ககுடித்து கொண்டிருந்த டீ யை எதிரி சத்தியமூர்த்தி மீது ஊற்றிவிட்டார். அவரது பாக்கெட்டில் வைத்ததிருந்த மடக்கும் கத்தியை எடுத்து சத்தியமூர்த்தி கன்னத்தில் கீறிவிட்டார். அப்போது சட்டை முழுவதும் இரத்தமாக இருந்தது. சண்டையை விலக்கிவிட்டு சத்தியமூர்த்தியை தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு ஆட்டோவில் அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விவரத்தை தான் போலீசார் என்னை விசாரித்தபோதும் கூறினேன் என்றால் சரிதான்.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி.,**
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**
**C.C.No.77 /2025**
**U/s. 296(b),118(1),351(3) BNS**
**PROSECUTION WITNESS NO. 3 (LW. 4)**

| | |
|---|---|
| **Name** : கணேசமூர்த்தி | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. ரேணுகா, நகல் ஆய்வாளர். செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**<u>C.C.No. 77/2025 13.02.2026</u> விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.55 AN**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது தஞ்சாவூர் ரெட்டிபாளையத்தில் குடியிருந்து தெற்குவீதியில் பெட்டிகடை நடத்தி வருகிறேன். கடந்த 13.08.2024 ம் தேதி மாலை 6.45–7.00 மணியளவில் தெற்குவீதியில் உள்ள எனது கடைக்கு பக்கத்திலுள்ள டீக்கடையில் சத்தியமூர்த்தி வந்தபோது டீ அருந்தி கொண்டிருந்த நபரிடம் ஒதுங்கி கொள் என்று சொல்ல அதற்கு இருவருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. இருவருக்கும் வாக்குவாதம் வந்ததில் டீ குடித்து கொண்டிருந்தவர் டீயை சத்தியமூர்த்தி மீது ஊற்றிவிட்டார். அப்போது டீ குடித்து கொண்டிருந்த நபர் அவர் கையிலிருந்த ஆயுதத்தை எடுத்து சத்தியமூர்த்தி கன்னத்தில் கீறிவிட்டார். ஆதலால் சத்தியமூர்த்தி சட்டை முழுவதும் இரத்தம் படிந்திருந்தது. பிறகு நாங்கள் அவரை தஞ்சை மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு சம்பவ நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு இருவருக்கும் வாக்குவாதம் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்தன் அடிப்படையில் முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம் - கனிமொழி.,**
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.